அரசியல் சண்டைக்கு அமலாக்கத்துறையைப் பயன்படுத்துவதா?

ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 23 -

அரசியல் சண்டைக்கு அமலாக்கத்துறையைப் பயன்படுத்தாதீர்கள். அரசியல் மோதல் தேர்தல் களத்தில் நடக்கட்டும் என ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அரு வருமாறு:-

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சி.பி.ஐ. ஆகிய மூன்றும் ஏவல் துறையாக செயல் பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் டாஸ்மாக் நிறுவனத்தில் கடந்த மார்ச் மாதம் அமலாக்கத்துறை திடீர் சோதனை செய்தது. டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி முறைகேடு நடந்திருப்பதாக தெரிவித்தது. பண முறைகேடு தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து டாஸ்மாக் நிறுவனத்துடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் அமலாக்கத்துறை விசாரணை மேற்கொண்டது. இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு ஒத்து ழைப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து டாஸ்மாக் வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு, கடந்த மே மாதத்தில் உத்தரவிட்டது. அப்போது அமலாக்கத்துறையை தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு கடுமையாக எச்சரித்தது.

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. மைசூரு நகர்ப்புற வளர்ச்சி அமைப்பின் நிலம் தொடர்பான வழக்கை முதல்வர் சித்தராமையா, அவரது மனைவி பார்வதி எதிர்கொண்டு வந்தனர். 14 வீட்டுமனைகளை சித்தராமையா மனைவி பார்வதி பெற்றதில் முறைகேடு நடந்ததாக பா.ஜ.க. குற்றம் சாட்டியது.

அதாவது, பார்வதிக்குச் சொந்தமான 3.16 ஏக்கர் வளர்ச்சியடையாத பகுதியில் உள்ள நிலத்துக்கு பதிலாக நன்கு வளர்ச்சியடைந்த நகர் பகுதியில் 38,284 சதுர அடி நிலம் வழங்கப்பட்டது என்றும், இதனால் அரசுக்கு ரூ.4 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக லோக் ஆயுக்தா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத் துறையும் விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில், நில ஒதுக்கீடு நடந்ததில் முறை கேடு வழக்கில் இருந்து கர்நாடக முதல்வர் சித்தராமையா மற்றும் அவரது மனைவியை லோக் ஆயுக்தா நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது. முறையான ஆதாரங்கள் இல்லாததால் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அமலாக்கத் துறை இவ்வழக்கை உச்ச நீதிமன்றம் வரை கொண்டு சென்று அங்கு குட்டு வாங்கியது. அரசியல் சண்டைக்கு அமலாக்கத்துறையை பயன்படுத்துவதா என உச்ச நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அமலாக்கத்துறையின் மேல்முறையீடு மனுவை தள்ளுபடி செய்து தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு உத்தரவிட்டது. நீதிபதிகளின் வாயை கிளறாதீர்கள் என்று ஒன்றிய அரசு வழக்கறிஞருக்கு தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் எச்சரிக்கை விடுத்தார்.

எங்களது வாயை கிளறினால் கடுமையாக விமர்சிக்க வேண்டியிருக்கும். நாடு முழுவதும் அரசியல் சண்டைக்கு அமலாக்கத்துறையை பயன்படுத்தி விடாதீர்கள். அரசியல் மோதல் தேர்தல் களத்தில் நடக்கட்டும். ஏன் அமலாக்கத் துறையை ஆயுதமாக பயன்படுத்துகிறீர்கள் எனவும் கேள்வியை கேட்டு சாட்டையை சுழற்றி உள்ளது.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களை குறிவைத்து தாக்குகிறார்கள் என்றால் அரசியலமைப்பு சட்டம் எங்கே வேலை செய்கிறது. எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நடத்தப்படும் பழிவாங்கும் நடவடிக்கையை இனிமேலாவது பா.ஜ.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உச்ச நீதிமன்றத்தின் எச்சரிக்கையாக ஒன்றிய அரசு கருத வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினகரன்

ஜூலை 22, 2025 செவ்வாய்க்கிழமை

மீண்டும் குட்டு

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சிபிஐ ஆகிய மூன்றும் ஏவல் துறையாக செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் டாஸ்மாக் நிறுவனத்தில் கடந்த மார்ச் மாதம் அமலாக்கத்துறை திடீர் சோதனை செய்தது. டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி முறைகேடு நடந்திருப்பதாக தெரிவித்தது. பண முறைகேடு தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து டாஸ்மாக் நிறுவனத்துடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் அமலாக்கத்துறை விசாரணை மேற்கொண்டது. இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து டாஸ்மாக் வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு, கடந்த மே மாதத்தில் உத்தரவிட்டது. அப்போது அமலாக்கத்துறையை தலைமை நீதிபதி தன்மையிலான அமர்வு கடுமையாக எச்சரித்தது.

நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து டாஸ்மாக் வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு, கடந்த மே மாதத்தில் உத்தரவிட்டது. அப்போது அமலாக்கத்துறையை தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு கடுமையாக எச்சரித்தது.

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. மைசூரு நகர்ப்புற வளர்ச்சி அமைப்பின் நிலம் தொடர்பான வழக்கை முதல்வர் சித்தராமையா, அவரது மனைவி பார்வதி எதிர்கொண்டு வந்தனர். 14 வீட்டுமனைகளை சித்தராமையா மனைவி பார்வதி

விக்கிரவாண்டி தொகுதியில் 28 அரசு நடுநிலைப்பள்ளிகளில்

ரூ.48.51 லட்சம் மதிப்பீட்டில் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள்!

அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஏற்பாட்டிற்கு தொகுதி மக்கள் பாராட்டு!

விழுப்புரம், ஜூலை 23 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 33 அரசு நடுநிலைப்பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள் (ஸ்மார்ட் கிளாஸ்) வசதிஅமைப்பதற்கு ஒரு பள்ளிக்கு ரூ.2 லட்சம் வீதம் நிதி ஒதுக்குமாறு தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் உள்ள சமூக பொறுப்புணர்வு (சி.எஸ்.ஆர்) நிதியை வழங்கிடுமாறு தொடர்ந்து வலியுறுத்தி விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா கடிதம் அனுப்பி இருந்தார்.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன நிர்வாக இயக்குநர், எம். எல்.ஏ. அன்னியூர் சிவாவுக்கு பதிலளித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தமிழக அரசு பள்ளிகளுக்கான சமூக பொறுப்பு நிதி, பள்ளி கல்வித்துறையின் கீழ் வரும் ‘நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி’ இயக்கத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

மேலும் எம்.எல்.ஏ.வின் கோரிக்கை ஏற்கப்பட்டு, விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள 28 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ‘ஸ்மார்ட் கிளாஸ்’ அமைப்பதற்கு, சமூக பொறுப்பு நிதிக்குழு மூலம் ரூ.48 லட்சத்து 51. ஆயிரம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை, ‘ நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி’ யக்கத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் குறிப்பாக விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் தான் அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் கட்டுவதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டு அதற்கான ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இதற்கான நிதி ஆதாரத்தினை தொடர்ந்து வலியுறுத்தி பெற்று தந்த விக்கிர வாண்டி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவாவுக்கு பொதுமக்கள் தொலைபேசி மூலமும் மற்றும் சமூக வலைதளங்களில் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து வருகின்றனர்.

கீழடி அகழாய்வு அதிகாரியை மாற்றியதற்கான காரணம் என்ன?

மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில், கீழடி அகழாய்வு தொடர்பான கேள்விகளை முன் வைத்திருந்தார். குறிப்பாக, தொல்பொருள் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணாவின் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக மதிப்பாய்வு செய்யப்பட்டதா?

அல்லது நிராகரிக்கப்பட்டதா?

தொல்பொருள் ஆய்வாளரை மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணம்

என்ன? என்பன உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:-

இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்படும் அகழாய்வுகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செய்யப்படுகின்றன. இந்த காலக்கட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வுகளுக்கு தலைமை தாங்கியிருக்கலாம். தொல்பொருள் ஆய்வு மைய நிபுணர்களால் சரிபார்க்கப்படும் அகழாய்வின் அறிக்கையை முன்னணி தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சமர்ப்பிக்கிறார். இது முறையாக சரிபார்க்கப்பட்ட பிறகு, தொல்பொருள் ஆய்வு மையம் அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிடுகிறது.

இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் மேற்பார்வையின் கீழ் கீழடி அகழாய்வு நடத்தப்பட்டுள்ளது. இதில் முன்னணி தொல்பொருள் ஆய்வாளரின் அறிக்கை மதிப்பாய்வில் உள்ளது. நிபுணர்களின் கருத்துகள் முன்னணி தொல்பொருள் ஆய்வாளருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. அவை இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையை நிராகரிக்கும் நடைமுறை இல்லை. கீழடி அகழாய்வை தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை நடத்தி வருகிறது.

தொல்பொருள் அதிகாரிகளுக்கு பணிகளை ஒதுக்குவது ஒரு வழக்கமான நிர்வாக காரணமாகும். நாட்டில் அகழாய்வுகள் பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1958 மற்றும் 1959 விதிகளின்படி நடத்தப்படுகின்றன. கீழடி அகழாய்வின் அடிப்படையில் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்கான சட்டம் மற்றும் உரிய அறிவியல் செயல்முறையைப் பின்பற்ற தொல்பொருள் ஆய்வு மையம் முழுமையாக உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் கிழக்கு ஒன்றியம், செங்காடு, குரும்பன்கோட்டை ஆகிய பகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கை பரப்புரைக்கான களப்பணியை பூத் எண்: 266, 267, 268 ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, வாக்குச்சாவடி முகவர்களுடன் கலந்துரையாடினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் பி.தெய்வசிகாமணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அன்பரசு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், ஒன்றிய அவைத்தலைவர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஒன்றிய துணைச் செயலாளர் ரீதர், மாவட்ட பிரதிநிதி குணசேகரன், கிளைச் செயலாளர் லூகாஸ், அந்தோணி ராஜ், பாபு அண்ணாதுரை, நந்தகோபால், BLA 2 & BDA, கிளை கழக நிர்வாகிகள் கிளைமன்ட் பிரபு, ராஜ்குமார், சிவராமன், ராஜேந்திரன், சிகாமணி, வேலு, நடராஜன், அரிபுத்திரன், ராஜ்குமார், வேலங்கணி, ஜான்மார்ஷல், செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் அணிலாடி, ஒலக்கூர் ஒன்றியம் வெள்ளிமேடு பேட்டை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து ஒலக்கூர் ஒன்றியம் வெள்ளிமேடு பேட்டை ஊராட்சியில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பழக்கன்றுகள் மற்றும் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர்கள் வல்லம் அமுதரவிக்குமார், ஒலக்கூர் சொக்கலிங்கம், ஒன்றிய துணைச் சேர்மன் ராஜா ராமன், வல்லம் மத்திய ஒன்றியச் செயலாளர் இளம்வழுதி, முகாம் கண்காணிப்பு அலுவலர்கள் அன்புராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வல்லம் ராமதாஸ், ஒலக்கூர் சரவணகுமார், உதயகுமார் ஆகியோர் உள்ளனர்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

நேற்று முன்தினம் (21 – 7 – 2025) தொடங்கியது!

1. கல்வி வளாகங்களில் சாதிய வன்முறை!

திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கண்டனம்!

மேற்கு வங்கம் காரக்பூர் ஐஐடியில் கடந்த ஏழு மாதங்களில் நான்கு மாணவர்கள் இறந்துள்ளதற்கு வருத்தம் தெரிவித்த திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் உயர் கல்வி வளாகங்களில் தொடர்ந்து சாதிய வன்முறையால் மாணவர்கள் இறப்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது:

உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக மத்திய பல்கலைகழகங்களில் அமைக்கப்படும் சம வாய்ப்பு பிரிவுகள் பல்கலைக் கழக மானியக்குழுவின் விதிமுறைகள், 2012இன் படி அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? அவை இன்னும் முழுமையாக அமைக்கபடாததற்கான காரணங்கள் என்ன?

கல்லூரி/பல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் வன்முறை நிகழ்வுகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டும் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக்கழக வாரியாக வெளியிட வேண்டும். பாகுபாட்டை எதிர்கொண்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் அல்லது அரசு வழங்கிய ஆதரவு மற்றும் உதவிகளின் விவரங்கள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் வகுத்துள்ள கூடுதல் வழிமுறைகள் என்ன?

2. பின்தங்கிய மாவட்டங்களில் மாதிரி கல்லூரிகள்

டி. மலையரசன் கோரிக்கை!

கல்வியில் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் 374 மாதிரி கல்லூரிகளை உருவாக்குவதாக ஒன்றிய அரசு முன்மொழிந்திருந்ததை சுட்டிக்காட்டி அதன் தற்போதைய நிலை என்ன என்று கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் டி. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களை கண்டறியும் வரையறைகள் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ள அத்தகைய மாவட்டங்கள் எத்தனை? இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட தேவைப்படும் கால அவகாசம் என்ன? இக்கல்லூரிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற பல்வேறு விவரங்களையும் அவர் கோரியுள்ளார்.

3. இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி! நாடாளுமன்றத்தில் கோரிக்கை!

சி.என்.அண்ணாதுரை

ஜி.செல்வம்

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி மையங்கள் எத்தனை. அதில் அளிக்கப்படும் பயிற்சி விவரங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை மற்றும் ஜி.செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாக இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள், பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், வணிக சங்கங்கள் அல்லது தனியார் துறை முதலாளிகளுடன் இப்பயிற்சிக்காக அரசு செய்துள்ள ஒப்பந்தங்களின் விவரங்கள் என்ன?

மற்றும் தமிழ்நாட்டில் PMKVY பயனாளிகளுக்கு சிறந்த வேலை வாய்ப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியுள்ளனர்.

4. தமிழ்நாட்டில் ஐடிஐகளின் செயல்பாடுகள்

அ.மணி கேள்வி!

தமிழ்நாட்டில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் (ஐடிஐ) விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள், அதில் வழங்கப்படும் படிப்புகள் மற்றும் சேர்க்கை விவரங்கள் என்ன? ஐடிஐகளில் கிடைக்கும் பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பின் தரத்தை அரசாங்கம் எவ்வாறு மதிப்பீடு செய்கிறது? புதிதாக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசாங்கம் நிறுவ முன்மொழிந்துள்ள ஐடிஐகளின் விவரங்கள் என்ன? பயிற்சி தரங்களை மேம்படுத்த, வேலைவாய்ப்பை உறுதி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

5. தங்க நகைக்கடன் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்க!

தங்க தமிழ்செல்வன்

கணபதி ராஜ்குமார்

தங்க நகைகள் மீது வங்கிகள் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்த இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வரைவு வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்யக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு எழுதிய கடிதத்தை சுட்டிக்காட்டி திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தங்கப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் 2025 ஐ மறுபரிசீலனை செய்ய வேண்டும், 2 லட்சம் வரையிலான விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக ஏற்றுக்கொள்வதை தொடர வேண்டும். மேலும் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளின் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துமாறும் RBI-க்கு அறிவுறுத்தச் சொல்லி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் எழுதிய கடித்தத்திற்கு ஒன்றிய அரசின் பதில் என்ன? என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

6. தமிழ்நாட்டில் புதிதாக கேலோ இந்தியா மையங்கள்!

டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!

தமிழ்நாடு முழுவதும் மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கேலோ இந்தியா மையங்களை (கேஐசி) திறக்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் குறித்து வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர், கடந்த ஐந்து ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டிலும் இந்த மையங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல், செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என்றும் மேலும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன என்றும் கேட்டுள்ளார்.

7. அகமதாபாத்தில் விமான விபத்துக்கான காரணங்கள் என்ன?

டாக்டர் கனிமொழி சோமு கேள்வி!

ஜூன் 12, 2025 அன்று அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளான துயர் மிகுந்த சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து மாநிலங்களவையில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது :

இந்த விபத்தில் இறந்தவர்கள்/காயமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

பயணிகள் தவிர மற்றவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு எவ்வளவு?

இதுவரை ஒன்றிய அரசு ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதா?

இந்த விபத்திற்கு காரணமாக யாரேனும் தனி நபர் அல்லது ஏதேனும் நிறுவனம் செய்த நாசவேலை வெளிச்சத்திற்கு வந்துள்ளதா?

இந்த விபத்துக்கு பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்து நிகழாமல் இருக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

வேலூர் முத்துரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னெடுப்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்று துண்டுப் பிரச்சாரமும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் நிகழ்வு மாணவர் அணி சார்பில் நடைபெற்றது . நிகழ்ச்சிக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் தலைமை தாங்கினார். மற்றும் மாநகர அமைப்பாளர் அருண், துணை அமைப்பாளர்கள் முத்துக்குமரன், சுகுமார், சுரேஷ், மகேஷ் பாபு, பிரதீப், வட்ட கழகச் செயலாளர் தேவராஜ், ராகுல், வட்டக் கழக பொறுப்பாளர் வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப பணி துணை அமைப்பாளர் செந்தில், மணி விக்னேஷ் கலந்து கொண்டனர்.